Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

**இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது ..**

## வேத ஆராய்ச்சி பாடங்கள்

## ஆவிக்குரிய வளர்ச்சி

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ஏ-4, டேஜு ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )

**வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்**

**ஜெபத்தைக் கேட்கிறவரே**
மாம்சமான யாவரும்
**உம்மிடத்தில்**
வருவார்கள்
– சங்கீதம் 65:2



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 12 தனிப்பிரதி ரூ 20/= ஜூலை 2011

# ஒளி எக்காளம்




## ஜெபத்தைக் கேட்கிறவர்

# ஜெபத்தைக் கேட்பவர்



நிஜா ஜெனடி

ஜெபம் என்பது ஆண்டவருக்கும் நமக்கும் உள்ள உறவு. நாம் அவரோடு பேசவும் அவர் நம்மோடு பேசுவதும் தான் ஜெபம். ஒரு பிள்ளை தன் தகப்பனிடம் பேசுவதுபோல நாம் தேவனிடம் பேசவேண்டும். இன்றைக்கு அநேகர் தங்களுடைய ஜெபம் கேட்கப்பட்டதா இல்லையா என்று அறியாதிருக்கிறார்கள். மனிதனின் கையினால் செய்யப்பட்ட, பேசாத, சுமக்கப்பட வேண்டிய விக்கிரகங்களிடம் நீங்கள் ஜெபிக்க வில்லை. ஜீவனுள்ள மெய்யான தேவனிடம் நீங்கள் ஜெபிக்கிறீர்கள் (சங்கீதம் 42:8). நம் ஜெபத்தை கேட்கிற, உணர்வுள்ள தேவனிடம் நாம் ஜெபிக்கிறோம். தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று கூறுகிறார். மனிதர்கள் நம் கஷ்டங்களை கண்டும் காணாததைப் போல இருப்பார்கள். நம் தேவன் நம்மோடுகூட இருந்து, நம் கஷ்டங்களை மாற்றிப் போடுவார். நாம் மாறிப்போகும் மனிதன்மேல் நம் நம்பிக்கையை வைக்காமல் மாறாத தேவனை நாம் நம்பியிருக்க வேண்டும். தாவீது எனக்கு ஒத்தாசை வரும் பர்வதத்திற்கு நேராய் என் கண்களை ஏறெடுக்கிறேன் என்று கூறுகிறான். நமக்கு உதவி செய்கிற தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். எசேக்கியா ராஜாவின் ஜெபத்தைக் கேட்டு ஆயுசு நாட்களில் பதினைந்து வருடங்களைக் கூட்டிக் கொடுத்தார். நம் ஜெபங்களுக்கும் பதில் கொடுக்கிற வராயிருக்கிறார்.

நம்முடைய உணர்ச்சிகள், நம் வேதனைகள், நம் துக்கங்களை அறிந்த தேவன், நமக்கு ஆதரவாக இருப்பவர். நாம் நன்றாக பாதுகாப்பாக இருக்க விரும்புகிறவர். நம்மீது அக்கரையுள்ள தேவன். நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். மனிதர்கள் மாறிப்போவார்கள். நம் வருத்தங்கள், சஞ்சலங்களை அறிந்த தேவன், நம்மை கவனித்து, நம்மீது உண்மையான அன்பு செலுத்து கிற தேவன். நம்மை துன்பப்படுத்துகிற தேவன் அல்ல.

### பதில் கிடைக்காத ஜெபம்

நம்முடைய அநேக ஜெபங்களுக்கு பதில் கிடைப்பதில்லை ஏன்? சிலர் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் என்ற விசுவாசம் இல்லாமல் ஜெபிப்பார்கள். சிலர் வேதவார்த்தையை பயன்படுத்தாமல் ஜெபிப்பார்கள். சிலர் மற்றவர்கள் கேட்கும்படியாக ஜெபிப்பார்கள். கர்த்தர் கேட்கும்படியாக அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். சிலர் கடமைக்காக ஜெபிப்பார்கள். சிலர் இருதயத்தில் உணரா மல் இருதயத்தின் ஆழத்திலிருந்து ஜெபிக்காமல், வீண் அலப்பு வார்த்தைகளினால் ஜெபிப்பார்கள். அன்றியும், **நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானி களைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்** (மத்தேயு 6:7). இன்னும் சிலர் வாயினால் ஜெபிப்பார்கள், ஆனால், அவர்கள் மனமும் இருதயமும் எங்கேயோ இருக்கும். முழு இருதயத் தோடு ஜெபிக்கமாட்டார்கள். சிலர் மற்றவர்கள் தங்களைப் புகழவேண்டும் என்றும், நன்றாக ஜெபிக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற் காகவும் அநேக வசனங்களைச் சொல்லி ஜெபிப்பார்கள். சிலர் மற்றவர்களைப் போல ஜெபிக்க வேண்டும் என்று அதையே பின்பற்றி ஜெபிப்பார்கள். சிலர் மற்றவர்கள் தங்களை பார்க்க வேண்டும் என்பதற் காக நீண்ட நேரம் ஜெபிப்பார்கள் (மாற்கு 12:40). மற்றவர்கள் கவனிக் கிறார்களா என்பதை விட்டுவிட்டு, தேவன் எப்பொழுதும் கவனித்துக் கொண்டி ருக்கிறார் என்ற உணர்வோடு ஜெபிக்க வேண்டும். மற்றவர்கள் தங்களை நல்லவர்கள், பக்தியுள்ளவர்கள் என்று கருதுவதற்காக நடிப்பவர்கள் மாய் மாலக்காரர்கள். இப்படிப்பட்டவர்களின் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காது. **நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி, ஜெபம் பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்க மாய் உனக்குப் பலனளிப்பார்** (மத்தேயு 6:6).

தேவசித்தத்திற்கு எதிராக ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதில் கிடைக்காது (1 யோவான் 5:14). கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு பிரியமானதைச் செய்யாமல் இருக்கும்போது பதில் வராது (1 யோவான் 3:22). இச்சைகளை நிறைவேற்றுவதற்காக ஜெபிக்கும் போதும், (யாக்கோபு 4:3), சந்தேகத் தோடு கேட்கும்போதும் (யாக்கோபு 1:6,8), கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தையிலும் நிலைத்திராமல் (யோவான் 15:7), இருந்தாலும், இயேசுவின் நாமத்தில் கேட்காமல், இருந்தாலும் (யோவான் 16:24), விசுவாசமில்லாமல் ஜெபித்தாலும் (மாற்கு 11:24) ஜெபத்திற்கு பதில் கிடைக்காது.

நாம் கேட்பதற்கு முன்பதாகவே அவருக்கு எல்லாம் தெரியும். சொல் பிறவாததற்கு முன்பே அதை அறிந்திருக்கிற தேவன், நமக்கு இன்னது தேவை என்பதையும், நம் வாஞ்சைகளையும் தேவன் அறிந்திருக்கிறார். நம்முடைய மற்றும் மற்றவர்களின் தேவைகள், நாளைக்கு நமக்கு இன்னது தேவை என்பதை நாம் அறியோம், ஆனால் கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்கிறார்.

### தாவீதின் ஜெபம்

தாவீது இப்படியாக ஜெபிக்கிறான்: **கர்த்தாவே, நான் கூப்பிடுகிற**

**சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி எனக்கு உத்தரவு அருளிச் செய்யும்** (சங்கீதம் *27:7*), தன் ஜெபத்திற்கு பதில் தரும்படியாக கேட்கிறான். **ஜெபத்தை கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்** (சங்கீதம் *65:2*). தாவீது ஜெபிக்கும்போது, **''ஜெபத்தை கேட்கிறவரே''** என்று தேவனை நோக்கிக் கூப்பிடுகிறான். தாவீது ஜெபித்த ஜெபங்களுக்கெல்லாம் தேவன் பதில் கொடுத்ததினால் தான் இப்படியாக கூறுகிறான். தன் வாழ்க்கையில் அதை ருசித்துப் பார்த்திருக்கிறான்.

நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நம் ஜெபத்தை கேட்கிறார் என்ற விசுவாசத்தோடுகூட ஜெபிக்க வேண்டும். நாம் ஜெபித்த ஜெபங்கள் ஒன்றும் வீணாய் போவதில்லை. நிச்சயமாகவே அதற்கு பதில் கிடைக்கும். தாவீதின் ஜெபங்களுக்கு பதில் கொடுத்த தேவன், நம் ஜெபங்களுக்கும் பதில் தருவார். நான் தினமும் ஜெபிக்கிறேனே என் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லையே என்று ஒருபோதும் சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தர் உங்கள் அருகில்தான் இருக்கிறார். பிரியமானவர்களே, நிச்சயமாகவே கர்த்தர் ஏற்ற வேளையில் பதில் தருவார். உங்கள் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்கிறார். நமக்கு எப்பொழுது எவையெல்லாம் கொடுக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்து முடிக்கிற தேவன், நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மிகவும் அதிக மாய் நமக்கு செய்ய வல்லவராயிருக்கிறார். நமக்காக இயேசு கிறிஸ்து பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதனால் நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கிறது. **அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப் படுத்துவேன்** (சங்கீதம் *91:15*). கர்த்தரை பின்பற்றுகிறவர்கள் உதவிக்காக அவரை நோக்கி கூப்பிடும்போது, கர்த்தர் அவர்களுக்கு செவிகொடுத்து, ஜெபங்களுக்கு பதிலளிப்பார். துன்பத்தின் வேளையில் கர்த்தர் அவர்களோடு கூட இருந்து, அவர்களை அழிவிலிருந்து விலக்கிக் காப்பார். அவர்கள் சொன்னதை அப்படியே செய்து, கர்த்தர் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவார். **மெய்யாய்த் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்** (சங்கீதம் *66:19*).

நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, (மத்தேயு *6:9*) என்று பிதாவை நோக்கி ஜெபிக்க இயேசு கிறிஸ்து நமக்கு கற்று தருகிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்பட்டு, அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிறவர்களே பிதாவை நோக்கி ஜெபிக்கும் தகுதியைப் பெறுகிறார்கள். **எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்** (ரோமர் *8:14*). நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதால் நம்முடைய தேவைகளை உரிமையோடு நம் தகப்பனாகிய தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்கிறோம்.



**கேளுங்கள், கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும். கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான்** (மத்தேயு *7:7,8*). **நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதை நான் செய்வேன்.** (யோவான் *14:13,14*).

நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால், நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கவேண்டும். தேவனை நோக்கி விசுவாசத்தோடு வேண்டுதல் செய்ய வேண்டும் (மத்தேயு *7:11*). நாம் எந்த காரியத்திற்காக பிதாவை நோக்கி ஜெபிக்கிறோமோ, அந்த காரியம் சில வேளைகளில் நமக்கு தீமையைக் கொண்டு வருவதாக இருக்கலாம். நம் தேவன் வருங்காரியங்களையும் அறிந்து வைத்திருக்கிறபடியால், அதை நமக்கு கொடுக்கமாட்டார். நன்மையானவற்றையே நமக்கு தருவார். தேவனுடைய பார்வையில் நன்மையாக தோன்றுவது நம்முடைய பார்வைக்கு தீமையாக இருப்பதுபோல் தோன்றலாம். நாம் பொறுமையாக காத்திருக்க வேண்டும். நாம் தேவனுடைய உதவியை நாடும் போது நமக்கு நன்மையானதையே தருவார். **நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிபடுத்திக் கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி** (யூதா *20*). நாமாகவே ஜெபிக்கும்போது நமக்கு ஒன்றும் தெரியாது. நாம் ஆவியில் ஜெபிக்கும் போது, ஆவியானவர் நமக்காக ஜெபிக்கிறார். அவருடைய சித்தத்தின்படி நமக்கு ஜெபிக்க உதவி செய்கிறார். அப்பொழுது நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கிறது.

**நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்** (யோவான் *15:7*) நம் ஜெபங்களுக்கு பதில் கிடைக்க வேண்டுமானால், தேவனோடு இணைந்து அவரை சார்ந்து வாழ வேண்டும். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அப்பொழுது நாம் விரும்புகிற எல்லாவற்றையும் அவரிடம் கேட்கலாம். அவற்றை நமக்கு கொடுப்பார். **வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும், அருவருப்பானது** (நீதிமொழிகள் *28:1*). சிலர் வேதத்தை படிக்காமல், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்காமல், அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் செய்கிற காரியங்கள் வாய்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் ஜெபிப்பார்கள். அப்படி ஜெபிப்பவர்களின் ஜெபத்திற்கு பதில் கிடைக்காது.

**நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன்** (யோவான் ***14:13,14***). நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி ஜெபிக்கும்போது, அந்த ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். இயேசு கிறிஸ்து என்றாலே இரட்சகர். அவரை வாழ்க்கையின் ஒளியாக, இரட்சகராக, வழிகாட்டுபவராக ஏற்றுக் கொள்பவர்கள் அவருடைய பிள்ளை

களாகிறார்கள். அவருடைய நாமத்தை விசுவாசிக்கும் ஒவ்வொரு தேவ பிள்ளையும் தேவன் சொன்னபடி நடப்பார்கள். அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்த பரிசுத்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:24). அவராலே பெற்ற அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறது. கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லியும் கனிகொடாமல் வாழ்பவர்கள் பயனற்ற கொடியைப் போல இருப்பார்கள். வேதத்தை வாசித்து தியானிப்பதன் மூலம், ஜெபத்தின் மூலம் அபிஷேகத்தை பெற்றுக் கொள்வதன் மூலமும் அவரில் நிலைத்திருக்கலாம். அவருடைய பிள்ளைகளாகாமல் அவரோடு ஐக்கியம் இல்லாமல் ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதில் கிடைக்காது.

**தேவனுடைய சித்தத்தை அறிந்து ஜெபிக்க வேண்டும்.** நாம் கேட்கிற காரியம் அவருக்கு சித்தம் இருந்தால் மட்டும் தருவார். நம் சுயவிருப்பத்தை நிறைவேற்றுவதற்காக நாம் ஜெபிக்கும் போது, அதற்கு பதில் கிடைக்காது. நாம் உண்மையாக, இயேசு கிறிஸ்துவை பின்பற்றி அவருடைய சித்தத்தை செய்கிறவர்களாக இருந்தால், நம் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறவராயிருக்கிறார். **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்** (யாக்கோபு 4:3). தவறான நோக்கத்தோடு கேட்கும் போது, எதையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது. நம்முடைய விருப்பமல்ல, அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும்படியாக நாம் ஜெபிக்கும்போது, அந்த ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்கும். நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்காதததற்கு சில காரணங்கள் உண்டு. சிலர் தேவனிடத்தில் கேட்கமாட்டார்கள். சிலர் தவறான நோக்கத்தோடு கேட்பார்கள். நம்முடைய இருதயமே நம்மை குற்றவாளிகள் என்று உணர்த்தும்போது, நமது இருதயங்களைக் காட்டிலும், தேவன் உயர்ந்தவராயிருப்பதால், அவர் எல்லாவற்றையும் அறிவார். நாம் தவறு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணரவில்லையென்றால், நாம் தேவ பயமற்றவர்களாயிருக்கிறோம்.

**அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, அவருடைய முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்** (1 யோவான் 3:22). தேவனுக்கு பிரியமானதையே நாம் எப்போதும் செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்து தனக்கு சித்தமானதைச் செய்யாமல், தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தின்படியே செய்யும்படி தன்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படு முன் பிதாவை நோக்கி, **இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால், நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது** (மத்தேயு 26:39) என்று ஜெபம் பண்ணினார். பிதாவுக்கு கீழ்ப்படிந்து அவரை நம்பியிருந்தார்.

இயேசு கிறிஸ்துதான் எல்லாவற்றிற்கும் நமக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். நாமும் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் நம்மைக் குறித்து மேலான நினைவுகளையும் வழிகளையும் தேவன் வைத்திருக்கிறார் (ஏசாயா 55:8).நம்மை இந்த பூமிக்கு ஒரு நோக்கத்தோடு தேவன் கொண்டு வந்திருக்கிறார். அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படியாக நாம் வாழும் போதுதான் சமாதானமும் திருப்தியும் கிடைக்கும்.

### பாவிகளுக்கு தேவன் செவிகொடுப்பதில்லை

நாம் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. அவற்றிற்கு காரணம் பாவம். சங்கீதக்காரன் இப்படியாகக் கூறுகிறான்: என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தோமானால், ஆண்டவர் எனக்கு செவிகொடார். பாவம் தேவனுக்கும் நமக்கு உள்ள உறவைப் பிரிக்கிறது. மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார் (சங்கீதம் 66:18). சங்கீதக்காரனின் இருதயம் தூய்மையாக இருந்ததால், அவன்தான் ஜெபித்த ஜெபத்தை தேவன் கேட்டார் என்று கூறுகிறான். நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளியாக தீர்க்குமென்றால் நாம் செய்த பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட வேண்டும். அப்பொழுது நாம் பரிசுத்தமாகிவிடுவோம். பின் நாம் நம் விண்ணப்பங்களை ஏறெடுக்கும் போது, நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் . நாம் மனந்திரும்பாமல் இருந்தோமானால், தேவனிடம் சேராதபடி நம்மை நாமே தடுத்து விடுகிறோம். **துன்மார்க்கனுக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்** (நீதிமொழிகள் 15:29). இருதயத்தில் பாவத்தை வைத்துக் கொண்டு ஜெபிக்கும் ஜெபத்தை கர்த்தர் கேட்கமாட்டார். **பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால், அவனுக்குச் செவிகொடுப்பார்** (யோவான் 9:31). **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவராக பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது** (ஏசாயா 59:2).

### பரிந்து பேசும் ஜெபம்

ஆபிரகாம் தேவனை அதிகமாய் நேசித்தான். தேவன் சொன்ன வாக்குறுதிகளை அப்படியே விசுவாசித்தான். ஒரு நண்பனைப்போல தேவனோடுகூட உறவாடினான். லோத்துவுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசினான். லோத்து குடியிருந்த சோதோம் கோமாரா மக்களின் அக்கிரமம் மிகவும் பெரிதாயிருந்தது. ஆபிரகாம் கர்த்தரிடம் துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ? என்றும் நீதிமான்களுக்காக அந்த பட்டணத்தை காக்கும்படி வேண்டினான். அங்கு பத்து நீதிமான்கள்கூட இல்லாத



தால் கர்த்தர் அந்த பட்டணத்தை அழிக்கு முன் லோத்துவையும் அவன் குடும்பத்தையும் அங்கிருந்து வெளியேற்றி பாதுகாத்தார். நாமும் ஆபிரகாமைப்போல தேவனை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிந்து, அவரோடுகூட உள்ள உறவில் நிலைத்திருந்து மற்றவர்களுக்காக ஜெபிக்கும் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் தருவார்.

### போராடி ஜெபித்தல்

**யாக்கோபு இராமுழுவதும் போராடி, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்**



என்று ஜெபித்தான். தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை விடாப்பிடியாக கேட்டுப் பெற்றுக் கொண்டான் (ஆதியாகமம் 32:26). யாக்கோபு தன் மாமனாகிய லாபானிடமிருந்து கானான் தேசத்திற்கு குடும்பத்தாருடன் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் சகோதரனாகிய ஏசா நானூறு பேரோடுகூட யாக்கோபை எதிர்கொள்ள வருகிறான் என்று கேட்டவுடன் மிகவும் பயந்தான். ஏனென்றால் அவன் ஏசாவின் ஆசீர்வாதத்தை ஏமாற்றி பெற்றுக் கொண்டதால் தன்னை தாக்க வருவதாக நினைத்து பயந்தான். அந்த இக்கட்டான நேரத்தில் தேவனை நோக்கி ஜெபித்தான். என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே, உன் தேசத்துக்கும், உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போவாய், உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே என்றும், தன் வாழ்க்கையில் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து அவரை துதித்தான். கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தையே நினைவு கூர்ந்து ஜெபித்தான். கர்த்தர் அவன் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார். கர்த்தர் ஏசாவும், யாக்கோபும் சந்தித்தபோது சமாதானத்தோடு இருக்கும்படி செய்தார். ஈசாக்கு கேட்டபடியே அவனை ஆசீர் வதித்து உயர்த்தினார். தன் சகோதரனை ஏமாற்றி அவனுக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட யாக்கோபை கர்த்தர் இஸ்ரவேல் என்று பெயரை மாற்றி அவன் வாழ்க்கையை மாற்றிப் போட்டார். உலக ஆசீர்வாதத்தையும், ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் கொடுத்தார். யாக்கோபைப் போல நாமும் தேவனிடம் கேட்க வாஞ்சிக்கிறார். தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்படி போராடி ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

**உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்** (சங்கீதம் 145:18). எலியா நம்மைப்போல பாடுள்ள மனுஷனாய் இருந்தும், மழை பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருடமும், ஆறு மாதமும், பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். வானம் மழையை பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது (யாக்கோபு 5:17,18). எலியா கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருந்தான். அதனால் கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டார்.

நெகேமியா ஜெப வீரனாக இருந்தான். எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு சிறைக் கைதியாக கொண்டு செல்லப்பட்டவன், எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டதையும், அங்கு சிறையிருப்பில் மீந்திருக்கிற மக்கள் மிகுந்த துன்பத்திலும்,



அவமானத்திலும் இருப்பதை அறிந்த நெகேமியா, சுவர் மறுபடியும் கட்டப்படவும், கர்த்தருடைய மக்களின் கஷ்டத்தை நீக்கவும், ஜனங்களின் பாவமன்னிப்புக்காகவும், உபவாசித்து ஜெபித்தான். **உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்** (நெகேமியா 1:6). பரலோகத்தின் தேவனாகிய உம்மில் அன்புகூர்ந்து உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும், கிருபையையும் காக்கிற மகத்துவமும், பயங்கரமுமான தேவனே, என்று ஜெபிக்கிறான். கர்த்தரை நேசித்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களின் ஜெபத்தைக் கேட்கிறவர் என்று விசுவாசத்தோடுகூட ஜெபிக்கிறான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடிக்கும்படி செய்தார்.

அலங்கத்தை கட்டுவதற்கு தேவைகள் சந்திக்கப்பட, ராஜாவின் கண்களில் தயவு கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். எல்லாவற்றிற்கும் உடனடியாக ஜெபித்தான். அலங்கத்தை கட்டுவதற்கு பல தடைகள் வந்தது. அவற்றை மேற்கொண்டு அலங்கத்தை கட்டிமுடித்தான். நெகேமியாவின் ஜெபத்திற்கு பதிலளித்த தேவன், நம் ஜெபங்களுக்கும் பதில் கொடுப்பார். நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் பிரச்சனைகளை கையாளுவதற்கான வழிமுறைகளைக் காட்டுவார். தைரியத்தையும், திட்டமிடுவதற்கான ஆலோசனைகளையும், சரியான தீர்வுகளையும் காட்டுவார். நம் வாழ்க்கையிலும், நம் தேவைகள் சந்திக்கப்படாமல் தடையாக இருக்கிறதா? தேவனை நோக்கிக்

கூப்பிடும்போது, எல்லா தடைகளையும் நீக்கிப் போட்டு தேவைகளை சந்தித்து, தடைபட்டிருக்கிற காரியங்களை கைகூடி வரச் செய்வார்.

**சிறைச்சாலையில் பேதுரு இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான். சபையார் பேதுருவுக்காக தொடர்ந்து ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர்** (அப்போஸ்தலர் 12:5). தேவதூதன் சிறைச்சாலையில் பேதுருவை தட்டி எழுப்பினான்.



பேதுருவின் கையிலிருந்து சங்கிலிகள் கழன்று விழுந்தது. பேதுரு தேவதூதனுடன் முதல் காவலையும், இரண்டாம் காவலையும் கடந்து நகரத்துக்குப் போகிற இரும்புக் கதவண்டை வந்தபோது, அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. திடீரென தேவ தூதன் மறைந்தான். சபையார் கூடி ஜெபித்ததற்கு கர்த்தர் பதில் கொடுத்து பேதுருவை அசாதாரணமான முறையில் சிறைச்சாலையிலிருந்து வெளியே கொண்டு வந்தார்.

ஜெபம் காரியங்களை மாற்றுகிறது. நாமும் நம்பிக்கையோடு ஜெபிப்போம். நாமும் மற்ற மனிதர்களால் கடன் தொல்லையால், நோயினால், பிரச்சனைகளால், மனக்காயங்களினால் கட்டப்பட்டவர்களாக, சிறைப் பட்டு இருக்கிறோமா? கர்த்தரை நோக்கி விசுவாசத்தோடு ஜெபிப்போம். கர்த்தர் கட்டுகளை அவிழ்த்து, சிறையிருப்பிலிருந்து விடுதலையாக்கி உங்களை வெளியே கொண்டுவர வல்லவராயிருக்கிறார். வியாதியின் பிடியிலிருந்து, கடன் பிரச்சனைகளிலிருந்து, மன வேதனையிலிருந்து, பிரச்சனை போராட்டங்களிலிருந்து, துக்கத்திலிருந்து, பொல்லாத தீய மனிதர்களிடமிருந்து, பயத்திலிருந்து உங்களை விடுவித்து பாது காப்பார். சூழ்நிலைகளை தலைகீழாக மாற்றிப்போடுவார். இப்பொழுது இருக் கிற நிலைமையை முற்றிலுமாக மாற்றிப் போடுவார். உங்களுக்கு சமாதானத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஆதலால் ஒருபோதும் சோர்ந்து போகாதிருங்கள். விசுவாசத்தோடுகூட ஜெபம் பண்ணுங் கள்.

விசுவாசிகள் சேர்ந்து கூடி ஒருமனதோடு ஜெபிக்கும் ஜெபம் வல்லமையுள்ளது. கர்த்தருடைய சித்தத்தை செய்கிற தேவபிள்ளைகள் விசுவாசத்தோடு ஜெபிக்கும் அந்த ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்கிறது. நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளை கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் (மத்தேயு 21:22). நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் பதில் கொடுப்பார் என்ற விசுவாசத் தோடுகூட ஜெபிப்போம்.

இயேசுகிறிஸ்து மரித்த லாசருவை உயிரோடு எழுப்பும்முன் பிதாவை நோக்கி இப்படியாக ஜெபித்தார்: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்கு செவிகொடுக்கிறீர் என்று அறிந்திருக்கிறேன் (யோவான் 11:41,42). நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல ஜெபிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

இயேசுகிறிஸ்து நம்மீது இரக்கமுள்ளவராக இருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் நடந்த வேதனைகளை அறிந்திருக்கிறார். நீங்கள் விரும்பிய காரியம் நடக்காததால் நீங்கள் சோர்ந்துபோய் இருக்கலாம். லாசரு மரித்தபோது, அவன் சகோதரி யாகிய மரியாளும் அவளோடுகூட வந்த ஜனங்களும் அழுவதைக்கண்டு இயேசு கிறிஸ்து வேதனையடைந்து, அவர்களோடுகூட அழுதார். நம்மைப்போல உணர்ச்சிகளுள்ள தேவன், துன்பப்படும் நம் வேதனைகளை அவர் அறிவார். மனிதர்களிடம் சொல்லமுடியாத இரகசியங்களை கர்த்தரிடம் சொல்லலாம். ஏனென்றால், அவர் மனிதனாக இந்த உலகத்திற்கு வந்து, எல்லா பாடுகளை, வேதனைகளை அனுபவித்திருக்கிறார். தைரியமாக அவரிடம் நம் வேதனை களைச் சொல்லுவோம். கர்த்தர் நிச்சய மாக நம் ஜெபத்தை கேட்டு அவற்றிலிருந்து விடுவித்து நம்மை பாதுகாப்பார். லாசருவின் கல்லறையின் மேலிருந்த கல்லை எடுக்கும்படி இயேசு கிறிஸ்து கூறியபோது, வாசருவின் சகோதரியான மரியாள் இயேசு கிறிஸ்துவிடம், இப்பொழுது நாறுமே, வாசரு மரித்து நான்கு நாளாயிற்றே என்றாள். இயேசு அவளிடம் நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றார். நாமும் விசுவாசத்தோடுகூட ஜெபிக்கும் போதுதான் கர்த்தரால் அற்புதங்களை செய்ய முடியும்.

ஜெபமே கர்த்தரிடத்திலிருந்து நமக்கு ஜெயத்தை கொண்டுவரும். ஜெபிப்போம், ஜெயம் பெறுவோம். ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-
**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**
ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா





# உங்கள் விசுவாசம் துக்கத்தை சந்தோஷமாக மாற்றும்

பெல்ராஜ் சென்னை

**வீ**ட்டிலே பற்றாக்குறை; மிகவும் நெருக்கடியான சூழ்நிலை. சோலையாய் இருந்த வாழ்க்கை இப்பொழுது வறண்ட பாலைவனமாக மாறிவிட்டது. எவ்வளவோ பிரயாசம் எடுத்தாயிற்று. வருமானத்திற்கான வழியே தெரியவில்லை, அலைச்சல்கள், மனச்சோர்வு, நிம்மதியின்மை, கண்ணீர், கசப்பு, போராட்டம்... இப்படி நம்முடைய வாழ்க்கை கடலலையைப்போல அலசடிப்படுகின்றது. வறுமை வாட்டி எடுக்கின்றது. துன்மார்க்கமாய் வாழ்பவர்களெல்லாம் நன்றாக இருக்கின்றார்கள். பாவமில்லாத ஒரு வாழ்க்கையை வாழும் எங்களுக்கு ஏன் இந்த கஷ்டங்கள்? எப்படி வாழ்வது? ஆசைகள் இல்லை. அடிப்படைத் தேவைகளை சந்திக்கவே கஷ்டமான சூழ்நிலை, பாவமே செய்யவில்லை. பின் ஏன் இந்த கஷ்டம்? மற்ற மனிதர்கள் ஒரு கட்டம் வரை உதவலாம். அப்படி உதவி செய்பவர்களிடமும் இன்ன தேவையை சந்திக்கக் கொடுங்கள், இவ்வளவு கொடுங்கள், இன்னின்ன உதவி செய்யுங்கள் என்று எப்படி கேட்பது? வழியே தெரியவில்லை. இப்பொழுது என்ன செய்வது? யாரிடம் போவது?

**நமக்கென்று ஒருவர் இருக்கின்றார்.**

அவர்தான் நம்மை உண்டாக்கின நம் அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவரிடம்தான் தினமும் ஜெபத்தில் எங்கள் தேவைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் சொல்லி, கேட்கிறோமே என்கிறீர்களா?

இந்தக் காரியத்தில் நாம் பார்க்கவேண்டியது அல்லது தெரிந்துகொள்ள வேண்டியது:

**ஏன் இந்த வனாந்திரம்?**

ஆண்டவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அவருடைய சித்தமில்லாமல் நம் தலையிலிருந்து ஒரு முடிகூட விழாது என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் இப்பொழுது நமக்குள்ள இந்த கஷ்டம் அவர் அனுமதித்ததுதான். எதற்காக இதை அனுமதிக்கிறார்? அவருடைய நோக்கமென்ன?

**‘‘உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ள மாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார். இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உன் கால் வீங்கவும் இல்லை’’** (உபாகமம் 8:2-4).

**‘‘கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்; உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை, உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை’’** (உபாகமம் 29:5).

இந்தக் கஷ்டமான சூழ்நிலையின் மத்தியிலும் நாம் அவரை மறுதலியாமல், விட்டு விலகாமல், அவருடைய வார்த்தைகளைப் பற்றி பிடித்து இருப்பதன் மூலம் அவரிடம் அன்பு செலுத்துகிறோமா என்று நம்மை சோதித்து பார்க்கிறார்.

**‘‘நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல’’** (1யோவான் 5:3).

அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நம்மைத்தான். நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருவதையே, அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார் (மாற்கு 12:30).

பக்தன் யோபு, உத்தமனாய், சன்மார்க்கனாய், தேவபக்தியுள்ளவனாய் இருந்தான். ஆண்டவர் சாத்தானிடம் ‘‘என்னுடைய பிள்ளை யோபுவைப் பார்த்தாயா?’’ என்றும் ‘‘சோதித்து பார்’’ என்றும் சவால் விட்டார். சாத்தான், யோபுவிடமிருந்த எல்லா சொத்துக்களையும், பிள்ளைகளையும் அழித்துப் போட்டான். அவனுடைய உடல் முழுக்க பருக்களைக் கொடுத்து சித்ரவதை செய்தான். யோபுவின் உருவமே உருக்குலைந்து காணப்பட்டது. அவனுடைய நெருங்கிய நண்பர்களாலேயே அவனை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. அவர்களும், அவனுடைய பாவந்தான் இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று சொன்னார்கள். அவனுடைய ஜீவனைத் தவிர அவனுடைய வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும், சாத்தான் சிதைத்துப் போட்டான். இவையெல்லாம் ஆண்டவர் அனுமதித்ததுதானே. அதனால் ஆண்டவரும் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார். சாத்தான் எதிர்பார்த்தது, யோபு இந்தக் கஷ்டங்களையெல்லாம் சகிக்க முடியாமல் கர்த்தரை மறுதலிக்கவேண்டும் என்பதே. யோபுவின் மனைவியும் அவனை கர்த்தரை மறுதலிக்கும்படி சொன்னாள் (யோபு 2:9). தேவன் எதிர்பார்த்தது, எல்லாக் கஷ்டங்களையும் யோபு அனுபவித்தாலும், அவரை முழுமையாக நேசிக்கவேண்டும் என்பதே. **இது ஒரு பரிட்சைதான்.**

நம்முடைய வாழ்க்கையிலும் இந்த பரிட்சைதான் நடந்து கொண்டிருக்கிறது. சூழ்நிலைகளைப் பார்த்து பயப்படாமல், சூழ்நிலைகளைக் காட்டிலும் பெரியவராகிய நம் தேவாதி தேவன், ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தரை நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன்மூலம் அவரில் அன்புகூரவேண்டும். ஏன் வார்த்தைக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்?

**‘‘மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல? கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’’** (மத்தேயு 4:4).

நாம் உண்ணும் ஆகாரத்தினால் மாத்திரமா நாம் உயிர் வாழ்கிறோம்? இல்லை என்பதுதான் பதில். இந்த சரீரத்திற்கு மாத்திரம் உணவு இருந்தால்

போதாது. நம் ஆவி (இருதயம்), ஆத்துமா (மனது), சரீரம் இம்மூன்றுக் கும் உணவு வேண்டும்.

நாம் இந்த உலகத்தில் இருக்கிறோம். ஆனால், இந்த உலகத்தினால் அல்ல. we are in the world, but not of the world. நாம் காண்கின்ற, வாழ்கின்ற உலகம் (physical world), நாம் கண்களால் காணாத ஆவிக்குரிய உலகம் (spiritual world). இவைகள்தான் நம் உலகங்கள். நாம் வெறுமனே இந்த உலகத்தில் வாழ்பவர் களல்ல. பரலோக ராஜ்யமாகிய ஆவிக் குரிய உலகத்தை சார்ந்து வாழ்பவர்கள். காணாத, கேட்காத ஒரு விக்கிரகத்தை வழிபடுபவர்களல்ல நாம். காண்கின்ற, கேட்கின்ற, ஆவியாயுள்ள ஜீவனுள்ள தேவனை, ஆவியினாலே தொழுது கொள்பவர்கள், ஆராதிப்பவர்கள் நாம். ஆதலால், நமக்கு இரண்டு சட்டங்கள் உண்டு. ஒன்று, இந்த உலகத்துக்கான சட்ட திட்டங்கள் (natural law), இரண்டாவது, தேவனுடைய ராஜ்யத் துக்கான சட்ட திட்டங்கள் (God's law).

ஒரு சமயம், பரிசேயர் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவை பேச்சிலே அகப்படுத்தும்படி, இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? என்று கேட்கிறார்கள். அதற்கு இயேசு வரிக்காசை காண்பிக்கச் சொல்லுகிறார். அப்படியாக அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள். அந்தப் பணத்திலுள்ள சுரூபமும், மேலெழுத்தும் யாருடையது என்று கேட்கிறார். இராயனுடையது என்கிறார் கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவ னுடையதைத் தேவனுக்கும் செலுத்துங் கள் என்றார் (மத்தேயு *22:21*).

இதன்மூலம் நாம் அறிந்தகொள்வது: இந்த பூமிக்குரிய ராஜாக்களை அதாவது அதிகாரத்தில் உள்ளவர்களையும், அந்த அதிகாரத்தையும் (சட்ட திட்டங்கள்) உண்டாக்கினது ஆண்டவரே. ஆகவே, இந்த பூமிக்குரிய அதிகாரங்களுக்கும் நாம் கீழ்ப்படியவேண்டும்.

மற்றொரு சமயம், வரிப்பணம் வாங்குபவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் (இயேசு கிறிஸ்து) வரிப்பணம் செலுத்துகிறதில்லையா? என்று கேட்கிறார்கள். அதற்கு பேதுரு, செலுத்துகிறார் என்கிறான். பேதுரு, இயேசு கிறிஸ்துவிடம் செல்லுகிறான். அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனிடம், நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்கிறார் ( மத்தேயு *17:27*).

இங்கேதான் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்த பூமிக்குரிய சட்டமான வரி செலுத்துதலை, ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்துக்கே உரியதான 'அற்புதம்' மூலம் சந்திக்கிறார். ஆண்டவர், இந்தப் பகுதியை வேதத்தில் ஏன் இடம் பெறச் செய்தார்?- அவருடைய நோக்கமென்ன? அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இதே அற்புதத்தை பெற்றுக் கொள்ள செய்யமுடியும். அதற்கு நாம் அவருடைய ராஜ்யத்தின் பிள்ளை களாக மாறவேண்டும். நம்முடைய பாவங் களையெல்லாம் நாம் அவரிடத்தில் அறிக்கை செய்து, மன்னிப்பு கேட்போ மானால், அவர், நம்முடைய பாவங்களை யெல்லாம் அவை எப்பேர்ப்பட்ட பாவ மென்றாலும் மன்னித்து, அவருடைய இரத்தத்தால் நம்மைக் கழுவி, சுத்திகரித்து, தம்முடைய பரிசுத்த ஆவியினால் நம்மை அபிஷேகிப்பார். அப்பொழுது நாம் தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகளா வோம்.

இந்த இரண்டு உலகங்கள் அல்லது ராஜ்யங்களைக்குறித்து இயேசு சொல்லு கிறார்: இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவ னைப்



பகைத்து, மற்றவனைச் சிநேகிப் பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப் போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக் குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ... இப்படியாகச் சொல்லிய அவர், ஆகாயத்துப் பறவைகளுக்கு ஆகாரத்தைக் கொடுக்கிறவர், காட்டிலிருக் கிற புஷ்பங்களுக்கு விதவிதமாக உடுத்து விக்கிறவர், அவைகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய உங்களைப் போஷிப்பதும், உங்களுக்கு உடுத்துவிப் பதும் அதிக நிச்சயமல்லவா என்கிறார். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டி யவைகள் என்று பரமபிதாவாகிய அவர் அறிந்து வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். இவைகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாகச் சொல்லுகிறார்:

**''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியை யும் தேடுங்கள், அப்பொழுது இவைக ளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

**ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்''** (மத்தேயு *6:33,34*).

ஆம், எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே, நாம் முதலாவது தேவனு டைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். அப்படி அவற்றை நாடும்போது, இவைகளெல் லாம் (உண்பது, குடிப்பது, உடுப்பது) கூடக் கொடுக்கப்படும்.

நாம் இந்த உலகத்திலே வாழ்ந்தா லும், இந்த உலகத்துக்குரியவர்கள் அல்ல. நாம் தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகள். தம்மைப் பற்றியும், தம்முடைய ராஜ்யத்தைப் பற்றியும் இந்த உலகத்துக்குச் சொல்ல ஆண்டவர் எடுத்துக்கொண்ட இரண்டு கருவிகள், பரிசுத்த வேதாகமும், நாமும். ஆம், நம்மைக் கொண்டும், தம்மை இந்த உலகத்துக்கு ஆண்டவர் வெளிப்படுத்து கிறார். நாம், 'எழுதப்பட்ட நிருபங்கள்'.

முதலாவது தேவனுடைய ராஜ்யத் தைத் தேடுவது என்றால் என்ன? நாம், நம்முடைய சுய சித்தத்தின்படி அல்லது இஷ்டத்தின்படி நடவாமல், நம்முடைய தேவனின் சித்தப்படி செய்வதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அவருடைய பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துத லின்படி நடப்பதே.

அப்படியென்றால் அவருடைய சித்தம் என்ன?

**ஒருவனும் கெட்டுப்போவது நம் பிதாவின் சித்தமல்ல** (மத்தேயு *18:14*). **சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக் கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்** (ஏசாயா *11:9*). இதுவே நம் தேவனுடைய சித்தம். இதையே நாம் இந்த பூமியிலே செய்யவேண்டும்.

நம்முடைய சித்தத்திற்கும் தேவ சித்தத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? நமக்கு தெரிந்ததெல்லாம் நேற்றும், இன்றும் நடந்தவைகள்தான். ஆனால் நம்மை உண்டாக்கின ஆண்டவருக்கோ, இனி நம் வாழ்க்கையில் நடக்கப்போகிறக் காரியங்களும் தெரியும்.

**- தொடரும்**